# விசேட தேவையுடைய மாணவர்களை முகாமை செய்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

பரமதயாளன் மதுசன்
*கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை*
*ORCID 0009-0004-3996-5261*

கல்வியில் சமவாய்ப்புக்களை ஏற்படுத்தும் முகமாக அனைவரையும் உள்ளடக்கிய கல்வியானது சர்வதேச ரீதியில் விருத்தியடைந்து வருகின்ற எண்ணக்கருவாக மாறியுள்ளது. இவ்வாய்வானது மட்டக்களப்புமாவட்டத்தை மையமாகக் கொண்டமைந்துள்ளதோடு விசேட தேவையுடைய மாணவர்களை கையாள்வதிலும் முகாமைப்படுத்துவதிலும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை அறிந்து கொள்வதனை நோக்கமாகக் கொண்டு அளவை நிலை ஆய்வாக இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி, மட்டக்களப்பு மேற்கு,கல்குடா, பட்டிருப்பு கல்வி வலயங்களில்விசேட கல்வி அலகுகளைக் கொண்ட 21 பாடசாலைகளில் 50% ஒதுக்கீட்டு மாதிரியின் அடிப்படையில் 10பாடசாலைகள்மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு இப்பாடசாலைகளிலிருந்து அனைத்து அதிபர்களும் உப அதிபர்களும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் இடைநிலைப்பிரிவு ஆசிரியர்களும், விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு இவர்களிடமிருந்து வினாக்கொத்து,நேர்காணல்,குவியக்குழுக் கலந்துரையாடல் முதலான ஆய்வுக் கருவிகளினூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.வினாக்கொத்து மூலமாகப் பெறப்பட்ட அளவுசார் தரவுகள் SPSS (Version 27) மூலமாக பகுப்பாய்வு செய்யப்பட்டு பியர்சனின் இணைவுக் குணகம் கணிக்கப்பட்டு Microsotf Excel மூலம் அட்டவணைகள், சலாகை வரைபுகள், சிதறற் புள்ளி வரைபுகள் என்பன மூலம் வகை குறித்து காட்டப்பட்டுள்ளதுடன் நேர்காணல், குவியக்குழுக் கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட பண்புசார் தரவுகள் விபரணப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது.பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு ஆய்வு நோக்கங்களின் அடிப்படையில் கலப்பு ஆய்வு அணுகுமுறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வின் முடிவுகளாக விசேட கல்வி அலகுகளுக்கான வள ஒதுக்கீடு இன்மை, விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பொருத்தமான கற்றல் சூழல் இன்மை(r=0.752), அணுகல் வசதிகள் பொருத்தமின்மை(r=0.795), சமூக ஆதரவு குறைவாக உள்ளமை(r=0.798), மாணவர்களை முகாமை செய்வதற்கு தேவையானஆளணி இன்மை(r=0.795)முதலானவை இனங்காணப்பட்டதுடன், இதற்கான பரிந்துரைகளாக தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அந்நிறுவனங்களுடன் சுமூகமான தொடர்பினை பேணுதல்,க.பொ.த உயர்தர மாணவர்களின் செயற்றிட்டங்களை விசேட கல்வி மாணவர்களுக்கான வசதிகளாக பயன்படுத்திக் கொள்ளல், விசேட கல்வி ஆசிரியர்களுக்கு வாண்மைத்துவ பயிற்சிகளை வழங்குதல், தன்னார்வ தொண்டர் ஆசிரியர்களை சேவையில் இணைத்தல், விசேட கல்வி தொடர்பில் சமூகத்திடையே விழிப்புணர்வினை மேற்கொள்ளுதல் முதலான விதப்புரைகளும் இவ்வாய்வின் மூலம் முன்மொழியப்பட்டுள்ளன.

**முதன்மைச் சொற்கள்:** விசேட கல்வி, உள்ளடங்கல் கல்வி, முகாமைத்துவம், விசேட தேவைசார் மாணவர்கள்

## 1. ஆய்வு அறிமுகம்

கல்வியில் சமவாய்ப்புக்களையும் சமசந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தும் நோக்கில் விசேட தேவையுடைய மாணவர்களையும் உள்ளடக்கிய வகையில் கல்வி வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. விசேட தேவைகளை கொண்டவர்களுக்காக கல்வி வாய்ப்புக்களை வழங்குவதற்கான உலகளாவிய நவீன அணுகுமுறையான உட்படுத்தல் கல்வி செயற்படுத்தப்பட்டு ஒரு பிள்ளைக்கு ஒரு குறிப்பிட்ட இயலாமை

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2026, IRJTSR

அல்லது பல குறைபாடுகள் இருப்பினும், ஒவ்வொரு பிள்ளைக்குமான தனித்துவமான ஆற்றலை மேம்படுத்துவதற்கும் குறைபாடுகளை தவிர்ப்பதற்கு தேவையான வசதிகளை வழங்கி சாதாரண வகுப்பறைகளில் ஏனைய மாணவர்களுடன் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்(கல்வி அமைச்சு சுற்றறிக்கை 37/2020).

சாதாரண பிள்ளைகளுடன் ஒப்பிடுகையில் உடல், உள மற்றும் மனவெழுச்சி ரீதியில் இயலாமை கொண்டோருக்கும் மீத்திறன் கொண்ட பிள்ளைகளுக்கும் வழங்கப்படுகின்ற விசேட தேவைசார் கல்வியை நடைமுறைப்படுத்துவதிலும் விசேட தேவையுடைய மாணவர்களை கையாள்வதிலும் ஆசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். இவ்வகையிலே விசேட தேவையுடைய மாணவர்களை முகாமை செய்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை கண்டறியும் பொருட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.2 ஆய்வுப் பிரச்சினை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி, மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு,கல்குடா கல்வி ஆகிய கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய மாணவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர்.

**அட்டவணை 1.1 : மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விசேட கல்வி அலகுகளில் கல்வி பயிலும் மாணவர்களின் விபரம்.**

| கல்வி வலயங்கள் | விசேட கல்வி அலகுகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை | விசேட கல்வி அலகுகளில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மட்டக்களப்பு | 06 | 32 |
| மட்டக்களப்பு மேற்கு | 05 | 26 |
| மட்டக்களப்பு மத்தி | 04 | 16 |
| பட்டிருப்பு | 02 | 33 |
| கல்குடா | 06 | 35 |

(மூலம்: வலயக்கல்வி வருடார்ந்த அறிக்கைத் தொகுப்பு - 2025)

சஸ்னி(2021) என்பவர் மேற்கொண்ட‘‘விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களும் அவர்களுக்கான கற்றல் வாய்ப்புக்களும்’’எனும் ஆய்வில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும்ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் குறைவாக காணப்படுகின்றது என்றும் வகுப்பறை முகாமைத்துவத்தை சிறப்பாக பேணுவதன் ஊடாக விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியை மேம்படுத்த முடிகின்றதா என்பதற்கு 70 சதவீதமான ஆசிரியர்கள் ஓரளவு எனும் பதில்களையே தனது ஆய்விற்கான முடிவுகளாக வெளியிட்டுள்ளார். இவ் ஆய்வு முடிவானது ஆய்வுப் பிரதேசத்திலுள்ள ஆய்வுப்பிரச்சினையுடன் தொடர்புடைய வகையில் அமைவதால் இவ்வாய்வுப் பிரச்சினை ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கல்வியை வழங்கும் பொருட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில்உள்ள மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி, மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு,கல்குடா கல்வி ஆகிய கல்வி வலயங்களில்விசேட கல்வி அலகுகளின் ஊடாகவும் உள்ளடங்கல் வகுப்பறைகளின் ஊடாகவும் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சாதாரண மாணவர்களைப் போன்று விசேட கல்வி அலகுகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பது இலகுவானதல்ல. குறிப்பாக இம்மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் விசேட கல்வி அலகுகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர் நோக்கும் சவால்களை கண்டறிவதாக இவ்வாய்வானதுமட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் விசேட கல்வி அலகுகளைக் கொண்ட பாடசாலைகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விசேட தேவைகளையுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்களிலும் பார்க்க மேலதிகமான கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாவர். இதனால் இம்மாணவர்களை கையாள்வதிலும் முகாமை செய்வதிலும்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2026, IRJTSR

ஆசிரியர்களின் பங்கு இன்றியமையாததாகும்.குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் தொகையான விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுகின்றமையினால் இம்மாணவர்களை கையாள்வதற்காக பாடசாலை மட்டத்தில் விசேட கல்வி அலகுகளில் ஆசிரியர்களின் பங்களிப்பு எத்தகையது என்பது தொடர்பிலும், அம்மாணவர்களை கையாள்வதில் ஆசிரியர்கள் எதிர் கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் ஆராயப்பட வேண்டியதும் அவசியமானதாகும்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயலாமை கொண்டவர்களின் எண்ணிக்கையானது அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்கமைய அட்டவணை 1.2 இன்படி மட்டக்களப்பு மாவட்டமானது ஏனைய மாவட்டங்களை விட அதிகமான விசேட தேவையுடையவர்களை உள்ளடக்கிய மாவட்டமாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை 1.2 : கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்ட அடிப்படையிலான விசேட தேவையுடையோரின் எண்ணிக்கை.**

| மாவட்டம் | விபரம் | வகை அடிப்படையிலான விசேட தேவையுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காது கேளாதோர் மற்றும் வாய் பேச முடியாதோர் | பார்வைக் குறைபாடுடையோர் | கைகளை இழந்தோர் | கால்களை இழந்தோர் | மனரீதியாகப் பாதிக்கப்பட்டோர் | முதுகெலும்பு பிரச்சினை நீர்கட்டிகளைக் கொண்டோர | வலிப்புடையோர். | வேறு வகையுடையோர் |
| அம்பாறை | முழுமையாக | 641 | 201 | 278 | 408 | 1019 | 217 | 294 | 1064 |
| | பகுதியாக | 412 | 323 | 287 | 929 | 1317 | 264 | 254 | 874 |
| மட்டக்களப்பு | முழுமையாக | 630 | 404 | 195 | 527 | 1374 | 133 | 226 | 1214 |
| | பகுதியாக | 378 | 353 | 386 | 848 | 939 | 84 | 135 | 381 |
| திருகோணமலை | முழுமையாக | 440 | 354 | 231 | 332 | 828 | 199 | 259 | 220 |
| | பகுதியாக | 220 | 403 | 281 | 508 | 412 | 206 | 71 | 201 |

(மூலம் : கிழக்கு மாகாண புள்ளிவிபரவியல் திணைக்களம், திருகோணமலை - 2024)

ஆகவே விசேட தேவைகளையுடைய மாணவர்களை கையாள்வதிலும் முகாமை செய்வதிலும் ஆசிரியர்களின் பங்களிப்பு குறித்து ஆராயப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் விசேட கல்வி அலகுகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் வளப்பற்றாக்குறை காரணமாக கற்பித்தல் செயற்பாட்டினை முறையாக முன்னெடுப்பதில் சிரமப்படுகின்றனர்.

**1.3 ஆய்வு நோக்கம்**

**பொது நோக்கம்**

விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களை முகாமை செய்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் கண்டறிதல்.

**சிறப்பு நோக்கம்**

1. விசேட தேவைகளையுடைய மாணவர்களின் குறைபாடுகளை இனங்காணுதல்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2026, IRJTSR

2. விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக நடைமுறையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை கண்டறிதல்.
3. விசேட தேவைகளையுடைய மாணவர்களைமுகாமைத்துவம் செய்வதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்தல்.
4. விசேட தேவைகளையுடைய மாணவர்களைமுகாமைத்துவம் செய்வதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களைக் குறைப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்.

## 2.0 இலக்கிய மீளாய்வு

Abakah Francis (2026) மற்றும் பலர் மேற்கொண்ட Teachers' Perspectives on Inclusive Education for Children with Special Needs எனும் ஆய்வில் விசேட தேவைகள் உள்ள குழந்தைகளுக்குத் தரமான கல்விக்கான சமமான அணுகலை உறுதி செய்வதற்கான ஒரு முக்கிய அணுகுமுறையாக உள்ளடக்கிய கல்வி பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் போதுமான ஆசிரியர் பயிற்சி இல்லாமை, போதிய வளங்கள் இல்லாமை மற்றும் நிறுவன ஆதரவின்மை ஆகியவை உள்ளடக்கிய கல்வி நடைமுறைகளைத் திறம்படச் செயல்படுத்துவதைத் தடுக்கும் அம்சங்களாக அமைகின்றன என ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றது.

விசேட தேவைகளையுடைய மாணவர்களுக்குத் திறம்படக் கற்பிப்பதற்கான முக்கியக் அம்சங்களாக வேறுபடுத்தப்பட்ட கற்பித்தலை வழங்குதல், பல்வேறுபட்ட வகுப்பறைச் சூழல்களைக் கையாளுதல் மற்றும் தனிப்பட்ட தலையீடுகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் தங்களின் திறன்கள் குறித்து நிச்சயமற்ற உணர்வுடன் ஏராளமான வருங்கால ஆசிரியர்கள் தங்கள் தொழில் வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள் (ஹேன்சன் ரூ டாசன், 2020).

Zurratul Muna (2026)மற்றும் பலர் மேற்கொண்ட Teacher Knowledge and Readiness for Inclusive Education: Supporting Children with Special Needs எனும் ஆய்வில் ஆசிரியர்களின் அறிவுக்கும் விசேட தேவைகள் உள்ள மாணவர்களை முகாமை செய்வதற்கான அவர்களின் தயார்நிலைக்கும் இடையே ஒரு வலுவான நேர்மறையான தொடர்பு காணப்படுகின்றது ($\rho = 0.673 > p < .01$) என ஆய்வு முடிவு வெளிக்காட்டுகின்றது.

## 3.0 ஆய்வு முறையியல்

ஆய்விற்கு அவசியமான தகவல்களைச் சிறந்த வழிகளில் பெற பொருத்தமான நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வகையிலே இவ்வாய்விற்கான தரவுகள் விசேட கல்வி அலகில் கற்பிக்கும் ஆசிரியர்களிடத்திலிருந்தும் மற்றும் இடைநிலைப்பிரிவு ஆசிரியர்களிடத்திலிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் வினாக்கொத்தின் ஊடாகவும் பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள் மற்றும் விசேட கல்விக்கான ஆலோசகரிடமிருந்து நேர்காணல் மூலமாகவும் ஆசிரியர்கள் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்து ஆய்வாளனால் அவதானிப்பு படிவத்தின் மூலம் தரவுகள் பெறப்பட்டதோடு இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளதால் இவ்வாய்வானது ஒரு கலப்பு ஆய்வு அணுகுமுறையில் அமைந்துள்ளது அத்தோடு வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் மூலம் பெறப்பட்ட தரவுகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் செய்து அதன் மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமையப்பெற்றுள்ளதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

### 3.1 மாதிரித் தெரிவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி, மட்டக்களப்பு மேற்கு, கல்குடா, பட்டிருப்பு ஆகிய கல்வி வலயத்தில் விசேட கல்வி அலகுகளைக் கொண்ட 21 பாடசாலைகளில் 50%

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2026, IRJTSR

ஒதுக்கீட்டு மாதிரியின் அடிப்படையில் ஆய்வு முடிவுகளை பொதுமைப்படுத்துவதற்கு ஏதுவாக 10 பாடசாலைகள்ஆய்வாளனால் ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளிலிருந்து அனைத்து அதிபர்களும் உப அதிபர்களும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் இடைநிலைப்பிரிவு ஆசிரியர்களும், விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**அட்டவணை 1.3 : ஆய்விற்கான இறுதி மாதிரி எடுத்தல் பருமன் விபரம்.**


| கல்வி வலயங்கள் | விசேட கல்வி அலகுகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை | விசேட கல்வி அலகுகளில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை | பெற்றோர்கள் | அதிபர்களும் உப அதிபர்கள் |
|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | 06 | 32 | 32 | 18 |
| மட்டக்களப்பு மேற்கு | 05 | 26 | 26 | |
| மட்டக்களப்பு மத்தி | 04 | 16 | 16 | |
| பட்டிருப்பு | 02 | 33 | 33 | |
| கல்குடா | 06 | 35 | 35 | |
| மொத்தம் | 23 | 142 | 142 | 18 |

இதன்படி 10 பாடசாலைகளிலும் விசேட கல்வி அலகில் கற்கும் மாணவர்கள் அவதானத்திற்கு உட்படுத்தப்பட்டனர். விசேட தேவை கொண்ட மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் நோக்க மாதிரியின் அடிப்படையில் முழுவதுமாக மாதிரியாக ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். விசேட கல்வி அலகுகளில் கற்பிக்கும் 23 ஆசிரியர்களும் அப்பாடசாலைகளில் இடைநிலைபிரிவில் கற்பிக்கும் 60 வகுப்பாசிரியர்களும் இவ்வாய்விற்காக தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் பாடசாலையில் உள்ள அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்களும் இவ்வாய்விற்காக தெரிவு செய்யப்பட்டனர். ஆய்வின் வரையறை கருதியும் ஆய்வு முடிவுகளை பொதுமைப்படுத்துவதற்கும் அணுகக் கூடியவாறும் மாதிரிகள் ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## 4.0 தரவுப் பகுப்பாய்வுகள்

### 4.1 விசேட தேவைகளையுடைய மாணவர்களின் குறைபாடுகளை இனங்காணுதல்.

விசேட தேவையுடைய மாணவர்களின் குறைபாடுகளை இனங்கண்டு கொள்ளும் விதமாக ஆசிரியர்களிடம் வினா இலக்கம் 1.1 இல் விசேட தேவையுடைய மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களின் குறைபாடுகளையும் குறிப்பிடுக எனும் அளவு ரீதியான வினாவிற்கு வழங்கப்பட்ட பதில்களை உரு 4.1 வெளிக்காட்டுகின்றது.




*இந்த கட்டுரை* *ப்பு ஆவார்*

**உரு 4.1 : தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களின் எண்ணிக்கை**


தரவு பகுப்பாய்வின் அடிப்படையில் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஒட்டிசம், கேட்டல் குறைபாடு, உலகளாவிய அபிவிருத்திக் குறைபாடு, பார்வை மற்றும் கேட்டல் குறைபாடு, டவுண் குறைபாடுகளை உடைய மாணவர்கள் காணப்படுகின்றனர் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. பல்வேறு குறைபாடுகளைக் கொண்ட மாணவர்களை முகாமை செய்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை கண்டறிந்து கொள்ளும் பொருட்டு மாணவர்களின் விசேட தேவைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதோடு அவை வகை குறித்தும் காட்டப்பட்டுள்ளன.

## 4.2 விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக நடைமுறையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை கண்டறிதல்.

விசேட கல்வி அலகிலுள்ள மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக நடைமுறையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை கண்டறிந்து கொள்ளும் பொருட்டு பின்வரும் வினாக்கள் முன்வைக்கப்பட்டன.

| |
|---|
| Q.1 மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றனவா? |
| Q.2 கற்பித்தல் துணைச்சாதனங்களை வழங்கப்படுகின்றனவா? |
| Q.3 வகுப்பறைகளை கவின்நிலைப்படுத்தப்படுகின்றனவா? |
| Q.4 பாடசாலைச் சூழலை பொருத்தமானதாக காணப்படுகின்றதா? |
| Q.5 ஏனைய ஆசிரியர்களின் ஆதரவு கிடைக்கின்றனவா? |
| Q.6 தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவி பெற்றுக் கொடுக்கப்படுகின்றனவா? |

இத்தகைய வினாக்களுக்குவழங்கப்பட்ட பதில்களை உரு 4.2வெளிக்காட்டுகின்றது





*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துக்கள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

**உரு 4.2 : விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக நடைமுறையில் மேம்படுத்தப்படும் செயற்பாடுகள்**

இதற்கமையQ.1 மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றனவா? எனும் வினாவிற்கு 78% ஆசிரியர்கள் இல்லை என்ற துலங்கலையே வெளிப்படுத்தியுள்ளனனர். அத்தோடு Q.2 கற்பித்தல் துணைச்சாதனங்களை வழங்கப்படுகின்றனவா?எனும் வினாவிற்கு 81% ஆசிரியர்கள் இல்லை என்ற துலங்கலையே வெளிப்படுத்தியுள்ளனனர்.Q.3 வகுப்பறைகளை கவின்நிலைப்படுத்தப்படுகின்றனவா?,Q.4 பாடசாலைச் சூழலை பொருத்தமானதாக காணப்படுகின்றதா?,Q.5 ஏனைய ஆசிரியர்களின் ஆதரவு கிடைக்கின்றனவா? முதலான வினாக்களுக்கு பதிலளித்த ஆசிரியர்களின் துலங்கல்கள் 55% - 69%இடைப்பட்டதாக காணப்படுகின்றமையானது இவை குறைவானதாகவே காணப்படுகின்றது என்பதனை வெளிக்காட்டுகின்றது.Q.6 தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவி பெற்றுக் கொடுக்கப்படுகின்றனவா? எனும் வினாவிற்கான துலங்கல் 81% ஆக காணப்படுகின்றமையால் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவி முறையாக பெற்றுக் கொடுக்கபடவில்லை என்பதனை வெளிக்காட்டுகின்றது.

### 4.3 விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்தல்.

விசேட தேவையுடைய மாணவர்களை முகாமை செய்வதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டறியும் முகமாக ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் வினவப்பட்ட போதுஉரு 4.3 காட்டப்பட்டுள்ள துலங்கல்கள் பெறப்பட்டன.




**உரு 4.3 : விசேட கல்வி தொடர்பான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்கள்**

தரவுப் பகுப்பாய்வின் அடிப்படையில் ஆசிரியர் ஒருவரே காணப்படுகின்றமையினால் பல்வகையான தேவைகளையுடைய மாணவர்களை முகாமை செய்வது சிரமமாக உள்ளமை,ஆசிரியர் பற்றாக்குறையாக காணப்படுகின்றமை,சமூக ஆதரவு குறைவாக காணப்படுகின்றமை,வகுப்பறை சூழல் பொருத்தமானதாக காணப்படாமை,மாணவர்களுக்கான உபகரணங்கள் போதுமானதாக இல்லை,தளபாடங்கள் மாணவர்களுக்கு பொருத்தமானதாக காணப்படவில்லை என்பனவற்றை தமது துலங்கல்களாக வெளிப்படுத்தியுள்ளனர்.

#### 2.1.1 ஆசிரியர் பற்றாக்குறைக்கும் விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதற்குமிடையிலானஇணைவு

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2026, IRJTSR

ஆசிரியர் பற்றாக்குறைக்கும்விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதற்குமிடையிலான தொடர்பினைக் கண்டறியும் பொருட்டு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் வினவப்பட்ட பதில்களின் அடிப்படையில் இணைவானது பின்வருமாறு அமைந்துள்ளது.

**அட்டவணை : 4.1ஆசிரியர் பற்றாக்குறைக்கும் விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதற்குமிடையிலானஇணைவுக் குணகத்தின் பெறுமதி தொடர்பான விபரம்**

| Correlations | | | |
|---|---|---|---|
| | | Teachers | Management |
| Teachers | Pearson Correlation | 1 | .795** |
| | Sig. (2-tailed) | | .000 |
| | N | 83 | 83 |
| Management | Pearson Correlation | .795** | 1 |
| | Sig. (2-tailed) | .000 | |
| | N | 83 | 83 |
| **. Correlation is significant at the 0.01 level (2-tailed). | | | |


(மூலம்: SPSS Version 27 இல் இருந்து பெறப்பட்டது)

இவ் இணைவுக் குணகத்தின் பெறுமதியினை பகுப்பாய்வு செய்வதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கருதுகோள்கள் உருவாக்கப்பட்டு கருதுகோள் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இதனை அடிப்படையாக் கொண்டு ஆசிரியர் பற்றாக்குறைக்கும்விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதற்கும்இடையிலான தொடர்பின் தன்மை குறித்தும் விபரிக்கப்பட்டுள்ளது.

**கருதுகோள் 1**

பூச்சிய கருதுகோள் $H_0$: ஆசிரியர் பற்றாக்குறைக்கும்விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் இடையே தொடர்பு இல்லை.

மாற்றுக்கருதுகோள் $H_1$: ஆசிரியர் பற்றாக்குறைக்கும்விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் இடையே தொடர்பு உண்டு.




**உரு: 4.4ஆசிரியர்**

**பற்றாக்குறைக்கும் விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் இடையிலான நேர் இணைவு பற்றிய சிதறற் புள்ளி வரைபு**

பெறப்பட்ட இணைவுக் குணக அட்டவணையில் இணைவுக் குணகமானது 0.795 ஆகும். அதாவது ஆசிரியர் பற்றாக்குறைக்கும் விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் இடையிலான இணைவு 79 சதவீதமாக காணப்படுகின்றது. இவ் இணைவுக் குணகமானது 0.60 இற்கும் 0.799 இற்கும் இடையில் காணப்படுவதனால் இவ் இணைவானது வலுவான இணைவாகும்.

இவ் இணைவுக் குணகத்திற்கான பொருண்மை பெறுமானமானது .000 ஆக காணப்படுகின்றது. இது பொருண்மை நிகழ்தகவு மட்டம் 0.05 ஐ விடக் குறைவானதாகும் எனவே பூச்சிய கருதுகோள் ($H_0$) நிராகரிக்கப்பட்டு மாற்றுக்கருதுகோள் ($H_1$) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய ஆசிரியர் பற்றாக்குறைக்கும் விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் இடையில் தொடர்பு அல்லது இணைவு காணப்படுகின்றது என்பதோடு அது நேர்கணியமான 79 சதவீதமான இணைவு நிலையினைக் கொண்டுள்ளது. **அதாவதுஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்ற போது பல்வேறு விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வது என்பது கடினமானதாக அமையும் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.**

ஆய்வுப் பிரதேசத்தில் விசேட தேவைகளையுடைய மாணவர்கள் அதிகமாகக் காணப்படுகின்ற போதிலும் அம்மாணவர்களை முகாமை செய்வதற்கு போதியளவு ஆசிரியர்கள் காணப்படாமை பாரிய குறைபாடாக காணப்படுகின்றது.அத்துடன் விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமை செய்வதில் ஆசிரியர்கள் எதில் கொள்ளும் சவால்களாக விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பொருத்தமான கற்றல் சூழல் இன்மை (r=0.752), அணுகல் வசதிகள் பொருத்தமின்மை (r=0.795), சமூக ஆதரவு குறைவாக உள்ளமை (r=0.798), மாணவர்களை முகாமை செய்வதற்கு தேவையான ஆளணி இன்மை(r=0.79)முதலானவைகளும் அடையாளம் காணப்பட்டன.

**4.4 விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களைக் குறைப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்.**

தேவைகளையுடைய மாணவர்களை முகாமைத்துவம் செய்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை குறைப்பதற்கான வழிமுறைகளை முன்மொழியும் பொருட்டு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட துலங்கல்களாக

- ✓ விசேட கல்வி அலகுகளுக்கு போதிய அளவான ஆசிரியர்களை நியமித்தல்.
- ✓ பாடசாலையில் உள்ள ஏனைய ஆசிரியர்களின் உதவிகள் முறையாக பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.
- ✓ விசேட தேவைகளையுடைய மாணவர்களுக்கான தேவைகள் மற்றும் உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.
- ✓ சமூகத்தில் செயற்படுகின்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தொடர்பான முறையான தகவல் முறைமைத் தொகுதி ஒன்று பேணப்படுதலும் அந்நிறுவனங்களுடன் இணக்கமாக தொடர்பினை பேணுதலும்.
- ✓ விசேட தேவைகளையுடைய மாணவர்களுக்கான வகுப்பறை மட்ட வசதிகள் மேம்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும்.
- ✓ மாணவர்கள் இலகுவாக அணுகக் கூடிய விதத்தில் பாடசாலை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

**5.0 முடிவுகளும் விதப்புரைகளும்**

**முடிவுகள்**

விசேட தேவைகளையுடைய மாணவர்களை முகாமை செய்வதில் ஆசிரியர்கள் எதிர் கொள்ளும் சவால்களை கண்டறிந்து அவற்றை இழிவளவாக்கிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் முடிவுகளாக

- விசேட கல்வி அலகுகளில் அதிகளவான விசேட தேவைகளை உடைய மாணவர்கள் காணப்படுகின்ற போதிலும் ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவானதாகவே காணப்படுகின்றது **(சுற்றறிக்கை இல 37/2020 இன் படி ஆசிரியர் மாணவர் விகிதம் 1:5 என காணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது).**

- சமூக நலத்திட்டங்களை மேற்கொள்கின்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் காணப்படுகின்ற போதும் அவற்றின் பங்களிப்பு பாடசாலைகளுக்கு முழுமையாக சென்றடைவதில்லை.

- வகுப்பறையானது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பொருத்தமானதாக காணப்படாமை.

- மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள் போதுமானதாக காணப்படாமை (கேட்டல் கருவிகள், வகுப்பறை உபகரணங்கள்).

- விசேட தேவையுடைய மாணவர்களை கையாள்வதற்கு தேவையான பயிற்சி போதுமானதாக இல்லாமை.

- ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்பும், உதவியும் போதுமானதாக காணப்படாமை.

இவ்வாய்வின் தரவுப்பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு மேற்கூறப்பட்ட ஆய்வு முடிவுகள் பெறப்பட்டன. இதனை மையமாகக் கொண்டு அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கான விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**விதப்புரைகள்**

ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட தரவுகள், பகுப்பாய்வு முடிவுகள் மற்றும் கண்டறியப்பட்ட சவால்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் நடைமுறைச் சாத்தியமான பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

- கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இல. 37/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விசேட கல்வி அலகுகளில் ஆசிரியர்-மாணவர் விகிதம் 1:5 என்ற அளவில் இருப்பதை உறுதி செய்யும் வகையில் போதுமான விசேட கல்வி ஆசிரியர்களை நியமித்தல் வேண்டும்.

- ஆசிரியர் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு, பாடசாலையிலுள்ள இடைநிலைப்பிரிவு ஆசிரியர்களுக்குத் தேவையான அடிப்படைப் பயிற்சிகளை வழங்கி அவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதோடு, தன்னார்வ ஆசிரியர்களையும் சேவையில் இணைத்துக் கொள்ளலாம்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2026, IRJTSR

- விசேட தேவைகளுடைய மாணவர்களைத் திறம்படக் கையாள்வதற்கும், வகுப்பறை முகாமைத்துவம் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட கற்பித்தல் அணுகுமுறைகளுக்கும் (Individualized Education Plans - IEP) ஏற்ற பயிற்சிகளை ஆசிரியர்களுக்குத் தொடர்ச்சியாக வழங்குதல் வேண்டும்.

- விசேட கல்வி அலகுகளுக்கு அப்பாற்பட்டு, பாடசாலையிலுள்ள ஏனைய சாதாரண வகுப்பு ஆசிரியர்களுக்கும் விசேட தேவைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுத்தல்.

- விசேட தேவைகளுடைய மாணவர்களின் கற்றல் தேவைகளுக்கு ஏற்ப இயல்புநிலைக்கு ஏற்ற அமைதியானதும், பாதுகாப்பானதுமான வகுப்பறைச் சூழலை அமைத்துக் கொடுத்தல்.

- விசேட தேவைகளையுடைய மாணவர்கள் சிரமமின்றி வகுப்பறைகளுக்கும் ஏனைய பாடசாலைச் சூழலுக்கும் சென்று வரக்கூடிய வகையில் சாய்வுப் பாதைகள், கைப்பிடிகள் மற்றும் பொருத்தமான மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- மாணவர்களுக்கான கேட்டல் கருவிகள், பார்வைக் குறைபாட்டிற்கான சாதனங்கள் மற்றும் வகுப்பறை தளபாடங்கள் போன்ற மாணவர்களுக்குத் தேவையான கற்றல் துணைச்சாதனங்களையும் உபகரணங்களையும் போதுமான அளவில் வழங்குவதை வலயக் கல்வி அலுவலகங்கள் உறுதி செய்ய வேண்டும்.

- சமூகத்தில் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக நல அமைப்புக்கள் பற்றிய முறையான தகவல் முறைமையைப் பேணி, அவர்களுடன் சுமுகமான தொடர்பைப் பேணுதல் வேண்டும் இதன் வாயிலான மாணவர்களுக்கு தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

- அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் க.பொ.த உயர்தர மாணவர்களின் சமூக வேலைத்திட்டங்கள் மூலமாக விசேட கல்வி அலகுகளுக்குத் தேவையான நிதியுதவிகள், உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வளங்களைத் திரட்டுதல்.

**முடிவுரை**

பாடசாலை மட்டத்தில் சகலரையும் உள்ளடக்கிய வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற போதும் விசேட தேவையுடைய மாணவர்களை கையாள்வதிலும் முகாமை செய்வதிலும் ஆசிரியர்கள் பல்வேறு சவால்களை எதிர் கொள்கின்றனர். சாதாரண மாணவர்களைப் போன்று விசேட தேவையுடைய மாணவர்களை முகாமை செய்கின்றமையானது சிக்கல் தன்மை வாய்ந்ததாக உள்ளமையினால் ஆசிரியர்கள் எதிர் கொள்ளும் சவால்களை கண்டறிந்து அதனை இழிவளவாக்கிக் கொள்வதற்காக மேற்கொள்ளக் கூடிய பரிந்துரைகளை முன்வைப்பதாக இவ்வாய்வானது அமைகின்றதோடு விசேட தேவையுடைய மாணவர்களை உள்ளடக்கி கற்பித்தலை மேற்கொள்வதற்கான செயற்பாடுகள் குறித்து இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் விசேட கல்வி அலகைக் கொண்ட பாடசாலைகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு விசேட தேவைகளையுடைய மாணவர்களை வினைத்திறனான வகையில் முகாமைத்துவம் செய்வதற்கான வழிவகையினை

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2026, IRJTSR

முன்வைப்பதோடு விசேட கல்வி அலகுகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி கற்பதற்கான உரிமையினை முழுமையடையச் செய்வதும் ஆய்வாளனின் எதிர்பார்ப்பாகும்.

**உசாத்துணைகள்**

[1] அருள்மொழி, செ.(2017), கற்பித்தலுக்கான உளவியல், துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு.
[2] தனபாலன், பா.(2019), கல்விப் பிரயோக உளவியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
[3] இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2010). விசேட தேவைகள் சார் கல்விக்கான பல்துறை அணுகுமுறைகள், நாவல, நுகேகொட.
[4] கல்வி அமைச்சு (2024), பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஒழுங்கமைப்பு பற்றிய சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டுதல்கள், இசுருபாய, பத்தரமுல்ல.
[5] கல்வி அமைச்சு (2024), விசேட தேவைகளுடன் கூடிய
[6] மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயல்பாடு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்காக வெளியிடும் விசேட வசதிகள் வழங்கும் சுற்றறிக்கை மற்றும் ஆலோசனை கையேடு, இசுருபாய, பத்தரமுல்ல.
[7] Abakah, F., Morgan, A.-A. A., Sodje, E. O., & Dugbartey, F. (2026). Teachers' perspectives on inclusive education for children with special needs. *Journal of Global Research in Education and Social Science*, *20*(2), 49–63. https://doi.org/10.56557/jogress/2026/v20i210547
[8] Muna, Z., Julistia, R., Astuti, W., & Iramadhani, D. (2026). Teacher knowledge and readiness for inclusive education: Supporting children with special needs. *Atfaluna: Journal of Islamic Early Childhood Education*, *9*(1), Article 1. https://journal.iainlangsa.ac.id/index.php/atfaluna/article/view/14601
[9] சஸ்னி, மொ.ஹ.சா (2021). விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களும் அவர்களுக்கான கற்றல் வாய்ப்புக்களும்,*Muallim Journal of Social Science and Humanities,* DOI: https://doi.org/10.33306/mjssh/113

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*